பக்கங்கள் 20

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 22 செவ்வாய்க்கிழமை 04.02.2025 | அதிர்வு 186

## எதிரணிகள் ஒன்றித்தாலும் எம்மை வீழ்த்தவே முடியாது!

**ஜனாதிபதி சூளுரை**

"எதிரணிகள் எதற்காக ஒன்றுசேர முற்படுகின்றனவோ அந்தக் கனவு ஒரு போதும் நனவாகாது. எமது பயணத்துக்கு மக்கள் ஆசிர்வாதம் உள்ளது." 02

## நாட்டை ஆள முடியாமல்

# தடுமாறுகின்றது திசைகாட்டி தரப்பு



**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விளாசல்**

"மக்கள் விடுதலை முன்னணியின் திசைகாட்டி தரப்பினர் மேடைக்கு மேடை மக்களுக்குச் சொன்னதைச் செய்ய முடியாமல், நாட்டைத் திறம்பட ஆள முடியாமல் நாட்டையே செய்வதறியா நிலைக்கு தள்ளி வருகின்றனர். அரசானது மக்களைப் பலப்படுத்தி, அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். ஆனால், இந்த அரசு நுகர்வோருக்கு மலிவு விலையில் அரிசி மற்றும் தேங்காய் போன்றவற்றையேனும் வழங்க முடியாத நிலையை எட்டியுள்ளது. நாட்டில் உப்புக்குக் கூட தட்டுப்பாடு நிலவுகின்றது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"அரசு ஒன்றானது எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை நன்கு புரிந்துகொண்டு 03

# வடக்கு மக்களின் எதிர்பார்ப்பை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம்

**ஜனாதிபதி அநுரகுமார சத்தியம்**



"வடக்கு மக்கள் தெற்குத் தலைவர் மீது முதன்முறையாக நம்பிக்கை வைத்துள்ளனர். இது மிக முக்கியமாகும். அந்த மக்களுக்கு நிறைய எதிர்பார்ப்புகள் உள்ளன. அவற்றை நாம் நிறைவேற்றுவோம். வடக்கில் உள்ள பிரச்சினைகளுக்கு கூடிய விரைவில் தீர்வு காண்போம்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

குருநாகலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். 02




இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்திருக்க வேண்டிய உள்ளூராட்சி தேர்தல்கள் பெரும்பாலும் வரும் சித்திரை மாதம் நடைபெறுவது உறுதியாகி வருகிறது.

இந்தத் தேர்தல் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னரா அல்லது பின்னரா என்பதுதான் இப்போதைய கேள்வி. பெரும்பாலும் அதுவும் இந்த வாரத்தில் முடிவாகும் என எதிர்பார்க்கலாம்.

இந்தத் தேர்தலில் இப்போது ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேர்தல் பிரசாரங்களில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கலந்து கொள்ள மாட்டார் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இத்தகைய தேர்தலில் ஒரு கட்சிக்கு சார்பான போக்கில் நாட்டின் ஜனாதிபதியே செயல்படுவது பதவிக்குக் கண்ணியமானது அல்ல என்ற நிலைப்பாடு கருதி அவர் இத்தகைய முடிவை எடுத்திருக்கின்றார் எனக் கூறப்படுகிறது.

அப்படியாயின் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்களில் அவர் பங்கு பற்றியமை சரியானதா என்று ஒரு கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே.

தமிழ்நாட்டில் நீண்ட காலம் கோலோச்சிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவி செல்வி ஜெயலலிதாவும் தாம் அதிகாரத்தில் இருந்த காலத்தில் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களில் நேரடியாக இறங்குவதில்லை. ஜெயலலிதா போல தம்மை இப்போது அநுரகுமார திஸநாயக்க கருதிக் கொள்கிறாரோ தெரியவில்லை.

எது, எப்படியாயினும் தற்போது ஆளும் தரப்பின் செல்வாக்கு சரிந்து வருவதான கருத்து நிலைப்பாடு 02

# மட்டக்களப்பில் யானைப் பாதுகாப்பு மின்சாரக் கம்பியில் சிக்கி ஒருவர் பலி

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள பன்சேனை கிராமத்தில் மின்சாரக் கம்பியில் சிக்குண்டு குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

பன்சேனை, நல்லதண்ணி ஓடை – அடச்சகல் சந்திப் பகுதியில் உள்ள விவசாயக் காணி ஒன்றில் சட்டவிரோதமான முறையில் காட்டு யானைப் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கியதாலேயே முதலைக்குடாவில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான சோமசுந்தரம் சீராளசிங்கம் (வயது 39) எனும் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் மூன்று விவசாயிகள் யானையை விரட்டுவதற்காகச் சென்று திரும்பி வரும்போது விவசாயி ஒருவர் தனது காணியில் சட்டவிரோதமான முறையில் அமைத்திருந்த யானைப் பாதுகாப்பு மின்சாரக் கம்பியில் சிக்கியதில், ஸ்தலத்திலேயே ஒருவர் பலியானதுடன் மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் மரண விசாரணையின் பின் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொக்கட்டிச்சோலை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தப் பகுதியில் கிராம உத்தியோகத்தரால் கடந்த மார்கழி மாதத்தில் ஒலிபெருக்கி மூலமும் கிராமக் கூட்டங்களூடாகவும் காட்டு யானைப் பாதுகாப்புக்காக சட்டவிரோத மின்சார வேலியை அமைக்க வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்....

நிலவுகிறது. அப்படி ஒரு சரிவு வந்தால் அதன் தாக்கம் தனக்கு வராமல், தாம் நேரடியாகத் தேர்தலில் இறங்கவில்லை என்பதைக் காட்டி தம்மை காத்துக் கொள்ள முற்கூட்டியே ஜனாதிபதி இத்தகைய முடிவை எடுத்தாரோ தெரியவில்லை.

இதே சமயம் –

தேர்தல் செலவுகளை ஒழுங்குப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் பிரசார செலவினங்களை சமர்ப்பிக்காத 13 ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், பொதுத்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் செலவின விவரங்களைச் சமர்ப்பிக்காத 1,064 வேட்பாளர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவுகளை ஒழுங்குப்படுத்தும் சட்டம் முதன் முறையாக அமுல்படுத்தப்பட்டது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் பெறுபேறுகள் வெளியாகி 21 நாள்களுக்குள் வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரசார செலவினம் தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மொத்த வேட்பாளர்களில் 13 வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சார செலவினம் தொடர்பான விபரங்களை தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கவில்லை.

இவர்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டு, சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட மொத்த வேட்பாளர்களில் 1,064 வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சார செலவினம் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்கவில்லை.

இவர்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபருடன் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உத்தேச உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தேர்தல் செலவுகளை ஒழுங்குப்படுத்தும் சட்டம் குறித்து தெளிவுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

---

### எதிரணிகள்...

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் பணம் வீணடிக்கப்படுவதைத் தடுத்து, புதியதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த முற்படுவது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை கிடையாது என்றும் அவர் கூறினார்.

குருநாகலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:–

"ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு ரணில் விக்கிரமசிங்க அரச வதிவிடத்தைக் கையளித்துவிட்டார், அதற்காக அவருக்கு நன்றி. கோட்டாபய ராஜபக்ஷ, ஹேமா பிரேமதாஸ ஆகியோரும் வதிவிடத்தை ஒப்படைத்துவிட்டனர். ஆனால், மூவர் மாத்திரம் கையளிக்க மறுக்கின்றனர்.

பணம் இல்லாமல் இல்லை, ஆனால் அதிகாரத்தையும், சுகபோகத்தையும் கைவிட அவர்கள் தயாரில்லை. மக்கள் பணத்தை வீணடித்தேனும் வாழ நினைக்கின்றனர். இதற்கு இடமளிக்க முடியாது. இந்தக் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். அதனை நாம் செய்யும்போது அரசியல் பழிவாங்கல் என்கின்றனர்.

ஜனாதிபதி பதவி வகித்த ஒருவர், தனது மாத சம்பளத்தைக்கூட வங்கியில் இருந்து பெற மறந்துள்ளார். கடைசியில் அவரின் பிரத்தியேக செயலாளர் அந்த பணத்துக்கு வேட்டு வைத்துவிட்டார். அப்படியானால் இவர்களிடம் பணம் இல்லையா?

பாரிய வீடுகளை வழங்கமாட்டோம். செல்வதற்கு வழியில்லை என்றால் இருவர் வாழக்கூடிய அளவிலான வீடொன்றை வழங்குவோம். அதேவேளை, எமக்குப் பல சவால்கள் உள்ளன. அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும். எனினும், அவர்கள் (எதிரணிகள்) குழப்பமடைந்துள்ளனர்.

அரசொன்று ஆட்சிக்கு வந்து நிலையான நிலைமையை ஏற்படுத்துவதற்கு சிறுது காலம் எடுக்கும். அந்த காலப்பகுதிக்குள் குறுக்கு வழியில் வீழ்த்துவதற்கு முற்படுகின்றனர்.

கடந்த காலங்களில் பல அணிகள் இருந்தன. எல்லாம் ஒன்றாக இணைந்துவிட்டனர். அவர்களின் எண்ணம் ஈடேறாது.

மக்கள் எமது பக்கம் உள்ளனர். எமது பயணத்துக்கு ஆசிர்வாதம் வழங்குவார்கள். வெற்றியை நோக்கி செல்ல தமது பங்களிப்பை வழங்குவார்கள்."

– என்றார்.

---

### வடக்கு மக்களின்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். யாழ். மக்கள் முதன்முறையாக தெற்கு அரசு மீது, தெற்குத் தலைவர்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளதைக் காண முடிந்தது. இது மிக முக்கியமாகும்.

வடக்கில் உள்ள சில தலைவர்கள் தனிநாடு தருகின்றோம் எனக் கூறிய போதும், அரசியல் பரம்பரையில் வந்தவர்கள் இருக்கின்றபோதிலும் மக்கள் எம்மை தேர்வு செய்தனர். அவர்களுக்கு நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. அவற்றை நாம் நிறைவேற்ற வேண்டும்.

எம்மிடையே மீண்டும் பிரிவினைவாதம், போர், நம்பிக்கையீனம் என்பன இல்லாத, அனைவரும் ஒன்றிணையக் கூடிய நாடொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்குரிய ஆசிர்வாதம் வடக்கு மக்களிடமிருந்து கிடைத்துள்ளது.

30 வருடகால போர் மற்றும் அரசியல் காரணங்களால் வடக்கு பகுதிக்கு அபிவிருத்திகள் சென்றடையவில்லை. அந்தப் பகுதி மக்களின் பிரச்சினைகளை வேகமாகத் தீர்க்க வேண்டும். இது எமது பிரதான கடமையாகும். இனவாதம் மற்றும் மதவாதம் தலைதூக்குவதற்கு நாம் இடமளியோம். தேசிய சமத்துவத்தைக் கட்டியெழுப்புவோம்." – என்றார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கோட்டாபய கைது செய்யப்படுவார்

## உதய கம்மன்பில கூறுகின்றார்

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களுக்குப் பின்னால் ஒரு புதிய தலைமை சூத்திரதாரியை உருவாக்க அரசாங்கம் முயற்சிப்பதாக பிவித்துரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில குற்றம் சாட்டியுள்ளார்.






அரசாங்கம் ஆரம்பத்தில் உண்மையான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்ததாக நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்தார்.

எனினும் நிர்வாகத்தில் உள்ள சில நபர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், பொது மக்களைத் தவறாக வழிநடத்த ஒரு மாற்றுக் கதை உருவாக்கப்படுவதாக கம்மன்பில குற்றம் சாட்டினார்.

உண்மையிலேயே பொறுப்பானவர்கள் இன்னும் நிர்வாகத்திற்குள் இருப்பதால், ஒரு புதிய பிரதான சூத்திரதாரியை உருவாக்குவதற்கான திட்டத்தில் அரசாங்கம் இப்போது ஈடுபட்டுள்ளதாக கம்மன்பில கூறினார்.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக முன்னாள் புலனாய்வுத் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் குறிவைக்கப்படுகின்றனர் என அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக் ஷவுக்கு நன்மை பயக்கும் வகையில் இலங்கையின் புலனாய்வுப் பிரிவு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகளைச் செய்தது என்ற தவறான கூற்றை நிறுவுவதே இதன் நோக்கம் என்று கம்மன்பில தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி, விமானப்படையின் முன்னாள் தளபதி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஆகியோர் உள்ளிட்ட மூவர் கொண்ட ஜனாதிபதி விசாரணைக் குழுவை கம்மன்பில மேற்கோள் காட்டினார்.

இலங்கையின் புலனாய்வு அமைப்புகளைக் குண்டு தாக்குதல்களுடன் இணைக்கும் வகையில் இங்கிலாந்தைச் சேர்ந்த சேனல் 4 ஆவணப்படம் செய்த குற்றச்சாட்டுகளை அந்த குழு நிராகரித்ததாக உதய கம்மன்பில கூறினார்.

அரசாங்கம் அறிக்கையைப் புறக்கணித்து தவறான கதையை முன்வைப்பதாக கம்மன்பில குற்றம் சாட்டினார்.

அரசாங்க சதித்திட்டத்தில் முக்கிய சாட்சியாகக் கூறப்படும் அசாத் மௌலானா, மோசடி மற்றும் அடையாள மோசடி உள்ளிட்ட பல குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மௌலானாவின் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளைக் கட்டுப்படுத்துவதோடு புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராக வாக்குமூலம் பெறுவதற்காக அவர் இலங்கைக்குத் திரும்புவதற்கு அரசாங்கம் உதவுவதாக கம்மன்பில கூறினார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### தடுமாறுகின்றது...

திட்டமிட்டு செயற்பட வேண்டும். ஆனால், அவ்வாறான போக்கு இந்த அரசிடம் இல்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் ஒருபுறமிருக்க இன்று அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குக் கூட தட்டுப்பாடு நிலவுகின்றன. மக்களால் அமைதியான முறையில் போராட்டம் நடத்தக்கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரசின் குண்டர்கள் அதனை அடக்கும் நிலைக்கு நாடு வீழ்ந்துள்ளது." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை பிரதேச மட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் இரத்தினபுரி, ரக்வான ஐக்கிய மக்கள் சக்தி செயற்பாட்டு அலுவலகத்தை நேற்று திங்கட்கிழமை திறந்து வைத்து உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது, சிவப்பு லேபிள்கள் கொண்ட அத்தியவசியமாக பரிசோதனை செய்ய வேண்டும் என குறிக்கப்பட்ட கொள்கலன்கள் பரிசோதனையின்றி வெளியிடப்படுகின்றன. அரச நிர்வாகம் வீழ்ச்சி கண்டுள்ளன. கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் மூலம் ஆளுந்தரப்பினர் தோற்கடிக்கப்பட்டு வருவதில் இருந்து இது தெளிவாகின்றது.



இதன் காரணமாக, இவர்கள் வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்காது கூட்டுறவுச் சங்க தேர்தல்களில் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றனர். யக்கல கம்புருபிட்டிய பிரதேசத்திலும் இவ்வாறானதொரு சம்பவமே இடம்பெற்றுள்ளது. ஆளுந்தரப்பினர் கருத்துச் சுதந்திரத்தையும், மக்களின் ஜனநாயக உரிமையையும் கூட நசுக்குகின்றனர்.

தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆதரவு இருந்தால், கூட்டுறவுச் சங்க தேர்தல்களுக்கு பயப்பட வேண்டாம். தமது அணி தோற்பதால் அச்சமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஜனநாயக ரீதியான தேர்தல்களைத் தடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கும் இவர்கள் அழுத்தம் பிரயோகிப்பார்கள் போல் தெரிகின்றது. இவர்கள் ஜனநாயகம் தொடர்பில் பெரிதாகப் பேசினாலும், அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள வாக்களிக்கும் உரிமைக்குக் கூட பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

ஜனநாயகத்தை அழிக்கும் எந்த ஒரு வேலைத்திட்டத்துக்கும் இடமளிக்க மாட்டோம். ஜனநாயக உரிமைகளுக்கு களங்கம் ஏற்படுத்த இடமளிக்க மாட்டோம். மக்கள் கருத்துக்கு இடைஞலும் அழுத்தமும் பிரயோகிக்க வேண்டாம். வசனங்களை அங்கும் இங்குமாக புரட்டிப் பேசி அதிகாரத்தை பெற்றுக்கொண்டவர்களால் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாது போயுள்ளன.

அச்சுறுத்தல், அச்சமூட்டல் போன்ற விடயங்களைக் கையாள வேண்டாம். இது அவமானகரமான செயல். ஜனநாயக உரிமைகளை அபகரிக்கும் இந்த அரசுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை நடத்தி, மக்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் நாம் செயற்படுவோம்." – என்றார்.





# வவுனியா தவசிகுளத்தில் மைதானத்தில் வைத்து இளைஞர் மீது தாக்குதல்; அவர் ஆஸ்பத்திரியில்

**(வவுனியா நிருபர்)**

வவுனியா, தவசிகுளம் பகுதியில் விளையாட்டு மைதானத்தில் வைத்து இளைஞர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையால் அவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, தவசிகுளம் பகுதியில் இரண்டு அணிகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதன் போது அந்த மைத்தானத்திற்குள் வந்த சிலர் விளையாட்டில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியமையுடன், விளையாட்டு நிகழ்வுக்கு வழங்கப்படவிருந்த வெற்றிக் கிண்ணங்கள் மற்றும் அங்கிருந்த கதிரைகளையும் உடைத்துள்ளனர்.

காயமடைந்த இளைஞர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு பெறப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் இடம்பெற்று வருகிறன என வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# சுதந்திர தினத்தை முன்னிட்டு 285 கைதிகள் இன்று விடுதலை

77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று 285 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசேட அரச பொது மன்னிப்பின் கீழ் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஆறு பெண் கைதிகள் உட்பட 285 பேர் விடுதலைச் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, இன்று சிறைக் கைதிகளை திறந்த வெளியில் சந்திப்பதற்கும், அவர்களின் உறவினர்களுக்கு விசேட சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிக்கைகளை கையளிக்காத 13 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளைக் கையளிக்காத 13 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதில் 3 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும், 10 சுயேச்சை குழுக்களின் வேட்பாளர்களும் அடங்குகின்றனர் என



அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம்,பொதுத்தேர்தலில்போட்டியிட்டவர்களில் 1064 பேர் வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளைக் கையளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.



# அர்ச்சுனா எம்.பிக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவு

போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவிற்கு எதிராக மே 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளைத் தாக்கல் செய்யுமாறு அனுராதபுரம் தலைமை நீதவான் நாலக சஞ்சீவ ஜெயசூரிய காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

செல்லுபடியாகும் சாரதி உரிமம் இல்லாமல் மோட்டார் வாகனத்தைச் செலுத்தி போக்குவரத்து அதிகாரிகளின் கடமையைத் தடுத்தார் எனவும் குற்றவியல் பலத்தைப் பயன்படுத்தி அவர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இன்று தமிழருக்குக் கரிநாள்

ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியில் இருந்து இலங்கை தீவு விடுதலை பெற்ற நாள் இன்று. அதனைத் தனது சுதந்திர தினமாக அந்நாடு இன்று கொண்டாடுகின்றது.

ஆனால், இந்த இலங்கை தீவில் வடக்கையும், கிழக்கையும் தமது பூர்வீகத் தாயகமாகக் கொண்ட ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இது கொண்டாட்டத்துக்குரிய நாளன்று. சுதந்திர தினமன்று. இது அடிமைத்துவத் தினம். கரிநாள். அடக்குமுறை வேதனையின் ஆதங்கங்களை வெளிப்படுத்தும் அவல நாள்.

ஆங்கிலேயே ஆட்சியாளர்களிடமிருந்து தென்னிலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பௌத்த - சிங்களவர்களுக்கே இத்தினத்தில் விடுதலை கிடைத்தது. அத்தோடு தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பு அதிகாரமும் கூட அவர்களுக்கு இத்தினத்தில் கைமாறியது.

அதன்படி பார்த்தால், தமிழர் தேசத்தை சிங்களவர் தேசம் அடிமைப் படுத்திய தினமாகவும், தமிழர் தேசம் சிங்களத்திடம் அடிமைப்பட்ட நாளாகவும் இது அமைகிறது.

அதனால்தான் இத்தினத்தைக் கறுப்பு நாளாகத் தமிழர் தேசம் சோகத்துடன் அனுஷ்டிக்கின்றது.

இலங்கை தீவில் முதல் அந்நிய ஆதிக்க சக்தியாக போர்த்துக்கேயர்கள் காலடி எடுத்து வைத்தது 1505 இல். அப்போது இலங்கை தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் தனித் தனி இறைமை கொண்ட இரு வெவ்வேறு இராச்சியங்களில் வசித்து வந்தனர்.

காலப்போக்கில் இந்த இரண்டு இராச்சியங்களும் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லந்தரிடமும் பின்னர் ஆங்கிலேயரிடமும் வீழ்ந்து போனமை வரலாறு. இப்படி இரண்டு இராச்சியங்களாகப் போர்த்துக்கேயராலும், பின்னர் ஒல்லாந்தரினாலும், அதைத் தொடர்ந்து ஆரம்பத்தில் ஆங்கிலேயராலும் நிர்வகிக்கப்பட்ட இலங்கை தீவை 1833 ஆம் ஆண்டு வெள்ளையர்கள் தங்கள் நிர்வாக வசதிக்காக ஒரு குடையின் கீழ் - ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தனர்.

அந்த ஆட்சி முறையை அடுத்த 115 வருடங்களுக்குத் தொடர்ந்த வெள்ளையர்கள், தங்கள் நிர்வாக வசதிக்காகத் தாங்கள் ஒன்றிணைத்த இரண்டு இராச்சியங்களையும் - தமிழர் தேசத்தையும் சிங்களவர் தேசத்தையும் - தாங்கள்1948 இல் அதிகாரத்தை கையளித்து இலங்கைத் தீவில் இருந்து புறப் பட்டபோது, அட்சர கணித எண்ணிக்கைக் கணக்கில் பெரும்பான்மைய னரான சிங்களவரின் கைகளில் ஒப்படைத்துச் சென்றனர்.

இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தின் இறைமை இப்படித்தான் முதலில் போர்த்துக்கேயராலும், பின்னர் ஒல்லாந்தரினாலும், அதைத் தொடர்ந்து வெள்ளையரினாலும் ஆக்கிரமிக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில், கடைசியில் 1948 பெப்ரவரி 4ஆம் திகதி தீவின் பெரும்பான்மையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆகவே தமிழர் தேசத்தின் தனித்துவ சுதந்திரமும் இறைமையும் அவற்றைக் கைப்பற்றி வைத்திருந்த வெள்ளையரின் காலனித்துவத்திடமிருந்து சிங்கள பௌத்த பேரினவாதிகளின் கைகளுக்கு மாறிய நாளைக் கொண்டாடுவதற்கோ, அனுஷ்டிப்பதற்கோ தமிழரிடம் ஏதுமில்லை. அடிமைத்தனத்தின் மீதான மேலாதிக்க உரிமை வெள்ளை ஏகாதிபத்தியத்திடமிருந்து பௌத்த - சிங்களப் பேரினவாதத்திடம் கைமாறியமையை ஒட்டி துக்கம் கொண்டாடுவதைத் தவிர.

வெள்ளையர்களிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற இந்த 77 ஆண்டுகளில் தமிழர் தேசம் தனது கொடி உரிமை, குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை, நில உரிமை, தொழில் உரிமை, பண்பாட்டு உரிமை, மரபுரிமை என்று அனைத்தையும் - வாழ்வுரிமை வரை எல்லாவற்றையும் - தொலைத்து எமது தாயக மண்ணிலேயே வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்க்கப்பட்டிருக்கும் நிலைமையே இங்கு நீடிக்கின்றது. மறுபுறம் வேரடி மண்ணோடு பூமிப் பந்தெங்கனும் தூக்கி வீசப்பட்டுச் சின்னாபின்னப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றது தமிழினம்.

வாளேந்திய சிங்கக் கொடி தமிழர்களைஅடிமைப்படுத்தும் குறியீடு. அந்தக் கொடி உயர்வதைக் கண்டு பேருவகை அடைவதற்கு தமிழருக்கு ஏதுமில்லை. மாறாக, உள்ளக் குமுறலையும், விசனத்தையுமே அந்தக் கொடி ஏறுவது தமிழர் மனத்தில் ஏற்படுத்துகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

வரலாற்று ரீதியான எமது தாயகத்தில், எமது சுதந்திர இறைமையை நாம் மீட்டெடுத்து, எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் விதத்திலான சுயநிர்ணய உரிமையுடன், தன்னாட்சியை முன்னெடுக்க என்று வாய்ப்புக்கு கிட்டுகின்றதோ அன்றுதான் தமிழினத்திற்கு உண்மையான சுதந்திர தினம்.

# யாழ். நகர வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை





யாழ்ப்பாணம் நகரில் வர்த்தக நிலையங்களுக்கு வெளியில் பொருட்களை காட்சிப்படுத்தியிருந்த வர்த்தகர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் எச்சரிக்கை துண்டுகள் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பிலும் வர்த்தகர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டன.

தூய்மையான இலங்கை செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற்பாட்டில் யாழ். நகரப் பகுதி வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜயசிங்க, யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயமஹா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் நகரிலுள்ள வர்த்தக நிலையங்களின் முன்பாக பொருட்களை வைத்து விற்பனை செய்ய வேண்டாம் எனவும், வர்த்தக நிலையத்தின் முன்பாகவுள்ள வடிகால்களை துப்புரவாக வைத்திருப்பது அந்தந்த வர்த்தக நிலைய உரிமையாளர்களின் பொறுப்பு எனவும் யாழ். மாநகர சபை ஆணையாளர் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

வர்த்தக நிலையங்களில் குப்பைகளைச் சேர்த்து வைக்குமாறும் தினமும் இரு தடவைகள் யாழ். மாநகர சபையால் அவை பெற்றுக்கொள்ளப்படும் என்றும் வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தினார். அதேபோன்று வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்துவதை அனுமதிக்க வேண்டாம் எனப் பொலிஸார் அறிவுறுத்தினர்.

எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் கடைகளுக்கு பொருட்களை இறக்குவதற்கான நேரத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், நகரின் சில வீதிகளை ஒரு வழியாக்குவதற்கும் இதன்போது ஆலோசிக்கப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளையும் வடக்கு மாகாண ஆளுநர் பார்வையிட்டார். பஸ் நிலையத்தைச் சுற்றி உட்புறமாக அமைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.












# வடக்கு, கிழக்கு விவசாயிகள் பிரச்சினைக்கு இதுவரையில் உரிய தீர்வு வழங்கப்படவில்லை

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு




வடக்கு, கிழக்கில் உள்ள விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு புதிய அரசாங்கம் இதுவரை உரிய தீர்வை பெற்றுக் கொடுக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசாங்கம் தொடர்ந்தும் விவசாயிகள் மீது கருணை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. விவசாயிகள் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தத்தினால் பாரிய அழிவுகளை சந்திக்கின்றனர்.

எனினும் தமது பாதிப்பிற்கு நியாயமான தீர்வை தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் அதே நேரம், அரசாங்கம் விவசாயிகளின் நெல்லின் விலையை நிர்ணயம் செய்யும் நிலையில், அதன் சிந்தனை இருக்கவில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

பொறுப்பான அமைச்சர் நெல்லின் நிர்ணய விலையை அறிவிப்பதாக கூறுகின்ற அதே நேரம் அனுராதபுரம் மற்றும் ஏனைய பகுதிகளில் நெல் அறுவடை முடிந்த பின்னரே நெல்லுக்கு நிர்ணய விலையை தாம் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

அனுராதபுரத்தில் உள்ள விவசாயிகள் மாத்திரமே விவசாயிகள் என்றும் வடக்கு கிழக்கில் உள்ள விவசாயிகளை விவசாயிகள் போல் தெரியவில்லையா?

நெல்லுக்கான நிர்ணய விலையை அரசாங்கம் குறைவாக நிர்ணயிக்க உள்ளதாக அறிகிறோம். இதனால் விவசாயிகள் விவசாயத்திற்காக செலவு செய்த முதலீடுகளை மீள பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும். எனவே அரசாங்கம் விவசாயிகள் நஷ்டத்தை எதிர் நோக்காத வகையில் கூடிய விலை நிர்ணயத்தை தீர்மானிக்க வேண்டும்.

அவ்வாறு செய்யவில்லை என்றால் ஏனைய தனியார் நெல் கொள்வனவு செய்கின்றவர்கள் அரசாங்கத்தை விட மிகவும் குறைவாகவே நெல்லை பெற்றுக்கொள்ள விலையை அவர்கள் தீர்மானிப்பார்கள். எனவே கூடிய அளவிலான விலையை நெல்லுக்கு அரசாங்கம் தீர்மானிக்கின்ற போது தனியார் நெல் கொள்வனவு செய்கிறவர்களும் கூடுதலான விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வார்கள்.

விவசாயத்திற்காக விவசாயிகள் வங்கிகளில் கடனை பெற்றும் நகைகளை வங்கியில் அடமானம் வைத்தும் பணத்தை பெற்று விவசாயத்தை முன்னெடுத்துள்ளனர். வறுமைக் கோட்டின் கீழ் உள்ள விவசாயிகளை நாங்கள் தூக்கி விடுவதாக இருந்தால் அவர்களின் நெல்லுக்கான உரிய விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

எனவே புதிய அரசாங்கம் சாட்டுப்போக்கு கூறாமல் நெல்லின் விலையை நிர்ணயம் செய்து அழிவில் இருந்து கொண்டுள்ள விவசாயிகளை தூக்கி விட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது.”– என்றார்.





# லண்டன் பறந்தார் ரணில் விக்கிரமசிங்க

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று லண்டனுக்கு பயணமாகியுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, அவர் சர்வதேச அளவிலான பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்கவுள்ளார்.

ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களை நிவர்த்தி செய்வதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து இந்த சர்வதேச ஊடக மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க தனது கருத்துக்களை வெளியிடவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிட்டத்தட்ட 10 நாள்கள் லண்டனில் தங்கியிருப்பார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.




# புதுக்குடியிருப்பில் அரசாங்க அதிபரால் திறந்து வைக்கப்பட்டது குயின் பூங்கா

**(பா.சதீசன்)**

அரச நிறுவனமும், பொதுமக்களும் இணைந்து செயற்படும் செயற்திட்டத்தின் முன்மாதிரியான செயற்பாடாக சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பொழுதுபோக்கும் வகையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான பகுதியில் குயின் பூங்கா நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த பூங்காவானது நீண்ட காலமாக பாவனையற்று இருந்த நிலையில், அதனை சீர் செய்து மீண்டும் புதுப்பொலிவுடன் குயின் பூங்காவாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபையோடு இணைந்து முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இந்த பூங்காவில் துப்பாக்கியால் இலக்கு வைத்து சுடுதல், படகோட்டம், கூடைப்பந்தாட்டம், அம்பெய்தல் போன்ற பல்வேறு பெரியவர்களுக்கான விளையாட்டுக்கள், சிறியவர்களுக்கான விளையாட்டுக்கள் மற்றும் இனிமையான நாளை கொண்டாடுவதற்கு ஏற்ற நிலையிலும் இடங்கள் வடிவமைக்கப்பட்டு நேற்று மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மேலதிக மாவட்ட செயலாளர் சி.குணபாலன், பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த், புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் ச.கிருசாந்தன், குயின் பூங்கா உரிமையாளர் ப.சுபாஸ்கரன், புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் நவநீதன், அவலோன் நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் முகாமையாளர், மதகுருமார்கள், புதுக்குடியிருப்பு பிரதேசசபை உத்தியோகத்தர்கள், ஜனசக்தி முன்பள்ளி மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.














# யாழில் இளம் பெண்களுக்கான மாபெரும் கடின துடுப்பாட்ட திருவிழா

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினால் (JSAC) unicef நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் Sports For Development & Peace செயற்றிட்டத்தினூடாக நேற்று முன்தினம் வடக்கின் இளம் பெண்களுக்கான மாபெரும் கடின துடுப்பாட்ட திருவிழா (Northern Cricket Carnival) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வெகுசிறப்பாக இடம்பெற்றது.

இந்த துடுப்பாட்ட போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களை சேர்ந்த சுமார் 70 இளம் பெண்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில் unicef நிறுவன சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் சர்மிலி சதீஸ், பிரதேச செயலர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு கழகங்கள், துடுப்பாட்ட ரசிகர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கில் முதன்முதலாக இடம்பெற்ற பெண்களுக்கான கடின பந்து போட்டி என்பதுடன், பெண்கள் மத்தியில் துடுப்பாட்ட ஆர்வத்தினை அதிகரிக்கின்ற வகையில் இத்துடுப்பாட்ட திருவிழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# அளம்பில் றோ.க. மகாவித்தியாலய மாணவர்களின் மரதன் ஓட்டப் போட்டி




(பா. சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உட்பட்ட அளம்பில் றோ.க மகா வித்தியாலய மாணவர்களின் 2025 ஆம் ஆண்டு இல்ல மெய்வன்மை திறனாய்வு போட்டியினை முன்னிட்டு மாணவர்களுக்கிடையிலான மரதனோட்டப் போட்டி நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

ஆண்களுக்கான மரதனோட்ட போட்டி முல்லைத்தீவு சிலாவத்தை சந்தியில் இருந்து அளம்பில் றோ.க மகா வித்தியாலயம் வரையும், பெண்களுக்கான மரதனோட்ட போட்டி நான்காம் கட்டை பகுதியில் இருந்து அளம்பில் றோ.க மகாவித்தியாலயம் வரையும் இடம்பெற்ற மரதனோட்ட போட்டியில் பாடசாலையின் மாணவ, மாணவிகள் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர்.

ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீரர்களுக்கு வெற்றி கேடயங்களும், பதக்கமும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளதுடன் முதல் 10 இடங்களை பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்

இந்த மரதன் ஓட்ட போட்டிக்கான பிரதான அனுசரணையினை கனடாவில் வசிக்கும் கந்தசாமி பத்மநாதனும் பகுதி அனுசரணையாளர்களாக பிரதி அதிபர் ஏ.ஜீவரட்ணம், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களும் வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருளுடன் கைது சம்பவங்கள்:






## நிந்தவூரில் ஞாயிறு ஒருவர் கைது

**(பாறுக் ஷிஹான், தில்சாத் பர்வீஸ்)**

ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய சந்தேக நபரை திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

திருக்கோவில் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கை மற்றும் வீதி ரோந்து நடவடிக்கையின் போது கல்முனைக்குடி 10 பகுதியை சேர்ந்த 44 வயது சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கைதானார்.

கைதான சந்தேக நபர் வசம் இருந்து 1 கிராம் 280 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் சான்றுப் பொருளுடன் சட்ட நடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் திருக்கோவில் விசேட அதிரடிப் படையினரினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.





## கல்முனையில் கைதான 22 வயது இளைஞனிடம் மேலதிக விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுப்பு

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை விசேட அதிரடிப் படையினரால் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட 22 வயது இளைஞன் குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்து வந்த நிலையில் நேற்று இரவு கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் ஐஸ் போதைப் பொருளுடன் இந்த இளைஞர் கைதானார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை பள்ளிவாசல் வீதி அருகில் வைத்து இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருக்கின்றது. சந்தேக நபர் சான்றுப்பொருட்களுடன் சட்டநடவடிக்கைக்காக கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்த கைது நடவடிக்கையானது

கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் தலைமையில் இக்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப் பொருளுடன் கைது சம்பவங்கள்:



## 26 வயது இளைஞன் கேரளக் கஞ்சாவுடன் கைது

(பாறுக் ஷிஹான்)

கேரளக் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த இளைஞனை கல்முனை தலைமையகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அலியார் வீதி பகுதியில் இடம்பெற்றுள்ளது. 26 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஒருவரே கைதானார்.

இந்தப் பகுதியில் அண்மைக்காலமாகக் கேரளக் கஞ்சா விற்பனை செய்யப்பட்டு வருவதாக கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் இருந்து 1 மில்லி கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபரை சான்றுப் பொருட்களுடன் இன்று கல்முனை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த கல்முனை தலைமையகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




இந்த சோதனை நடவடிக்கையை கல்முனை பிராந்தியத் திற்கான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உதுமாலெவ்வை மஹ்மூத்கான் இப்னு அசாரின் வழிகாட்டலில், கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்சீன் பக்கீர் ஆலோசனையுடன் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் போதை மாத்திரையுடன் ஒருவர் கைது




(கி.வசந்தன்)

வவுனியா – பெரியார்குளம் பகுதியில் போதை மாத்திரையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அதன் பொறுப்பதிகாரி அழகிய வண்ண தலைமையிலான பொலிஸ் குழுவினர் வவுனியா, பெரியார்குளம் பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 50 போதை மாத்திரைகள் இளைஞர் ஒருவரிடம் இருந்து மீட்கப்பட்டது. அவற்றை உடமையில் வைத்திருந்த இளைஞரும் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் வவுனியா பெரியார்குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபராவார். மேலதிக விசாரணைகளின் பின் இந்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





# மட்டக்களப்பில் ரூ. ஒரு கோடி 92 லட்சம் மோசடி செய்த போலி வெளிநாட்டு முகவர் நிலைய உரிமையாளர் கைது

(கனகராசா சரவணன்)

ரூமேனியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வேலை பெற்றுதருவதாகத் தெரிவித்து மட்டக்களப்பில் தலா 16 லட்சம் ரூபா வீதம் 12 பேரிடம் ஒருகோடியே 92 லட்சம் ரூபா வாங்கி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சட்டவிரோத வெளிநாட்டு முகவர் நிலையம் ஒன்றை நேற்று திங்கட்கிழமை இலங்கை வேலைவாய்ப்பொ பணியகத்தினர் முற்றுகையிட்டு மூதூரைச் சேர்ந்த 29 வயதுடைய அதன் உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது:-

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் கல்முனை வீதியில் சட்டவிரோதமாக இயங்கிவந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் இல்லத்தின் உரிமையாளர் முகநூல் ஊடாக ரூமேனியா, போலாந்து, சேர்பியா போன்ற நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் வேலைவாய்ப்பு உள்ளதாக விளம்பரம் செய்துவந்துள்ளார்.

இதனையடுத்து வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெறுவதற்காக பலர் நேரடியாக அந்த முகவர் நிலையத்துக்கு சென்று விண்ணப்படிவங்களை நிரப்பி கடவுச்சீட்டுகளின் பிரதிகள் மற்றும் பொலிஸ் நற்சான்று பத்திரங்கள் உட்பட ஆவணங்களை வழங்கியுள்ளனர். இவர்களில் 12 பேர் தலா 16 லட்சம் ரூபா வீதம் 2023 ஆம் ஆண்டு வழங்கியுமுள்ளனர்.

இருந்தபோதும் அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பாது நீண்டகாலமாக இழுத்தடித்து வந்துள்ளார் நிறுவனத்தை நடத்துபவர். இந்த நிலையில் பணத்தை வழங்கியவர்கள் பணத்தை திருப்பிதருமாறு கேட்டுளனர். அதனை அவர் வழங்காதமயையடுத்து அவருக்கு எதிராக சிலர் மட்டக்களப்பு விசேட புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு செய்ததனர். கொழும்பிலுள்ள அரச வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் 12 பேர் முறைப்பாடு வழங்கினர்.

இதனையடுத்து வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவுப் பணிப்பாளர் கபில கருணாரத்தின தலைமையிலான குழுவினர் நேற்றுப் பகல் அந்த வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். அந்த முகவர் நிலையம் பதிவு செய்யப்ப டாமல் போலியாக இயங்கி வந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. ரூமேனியா, போலாந்து, சேர்பியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொள்வதற்காக 74 பேரிடம் இருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்கள் அடங்கிய 74 கோவைகளும் மீட்கப்பட்டன.

இதனை தொடர்ந்து முகவர் நிலையத்தில் காட்சிப் படுத்துவற்காக பெருத்தப்பட்டிருந்த பெயர்ப் பலகைகளை






அதிகாரிகள் கழற்றி எடுத்தமையுடன் அதன் உரிமையாளரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் 29 வயதுடைய மூதூரைச் சேர்ந்தவர் எனவும், இவரை விசாரணையின் பின்னர் மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவுன் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த முகவர் நிலையம் தொடர்பாக முகநூல் விளம்பரத்தை பார்த்து வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெறுவதற்காக, யாழ்ப்பாணம், மன்னர், வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 70 க்கு மேற்பட்டவர்கள் தலா 16 லட்சம் ரூபாவிலிருந்து 20 லட்சம் ரூபா வரை வழங்கியுள்ளனர் என பாதிக்கப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.



# மாவை சேனாதிராஜாவின் வரலாற்றுப் பயணம்

■ சிவபாக்கியராஜா

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஓராண்டுக்குள் தன்னுடைய மூத்த தலைவர்கள் இருவரை இழந்துள்ளது. இராஜவரோதயம் சம்பந்தன் 2024 ஜூனில் மரணித்தார். சம்பந்தனை விட 10 வயது குறைவான மாவை சேனாதிராஜா 2025 ஜனவரியில் இறந்திருக்கிறார். இருவருடைய மரண நிகழ்வுகளையும் கட்சி சீராக நடத்த முடியாத அளவுக்கு உள் முரண்பாடுகள் வலுத்திருக்கின்றன. சம்பந்தனின் இறுதி நிகழ்வில் நினைவுரையாற்றுவதற்குச் சிலருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மாவை சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வில் சிலர் கலந்து கொள்ள முடியாத அளவுக்கு நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டன. சிதை எரியூட்டப்படும் மயானத்திற்கூட சிலரை எதிர்க்கும் அநாமதேய அறிவிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன. இது கட்சிக்கு ஏற்பட்டுள்ள சரிவும் துயரமுமேயாகும்.

75 ஆண்டுகால அரசியல் வரலாற்றைக் கொண்ட தமிழரசுக் கட்சியில் சம்பந்தனும் சேனாதிராஜாவும் 60 ஆண்டுகளுக்கு மேலான அரசியல் பங்கேற்பைக் கொண்டவர்கள். பின்னாளில் இருவரும் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள். அதிலும் ஏனைய தலைவர்களை விட மிக அதிகமான காலம் தலைமைப் பொறுப்பிலிருந்தவர் சேனாதிராஜா. ஏறக்குறைய 10 ஆண்டுகள். இருந்தாலும் இதற்கான பெறுமதியை - மதிப்பை - கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் தொண்டர்களும் அளிக்கத் தவறியுள்ளனர். கட்சியைக் கட்டுப்படுத்தி, ஒழுங்காக்கி, ஆளுமை செலுத்தக் கூடிய தலைவர்கள் அடுத்த கட்டத்தில் இல்லை என்பதற்கான அடையாளமே இதுவாகும்.

இதற்குக் காரணம், இருவரும் தங்களுடைய தலைமைத்துவக் காலத்தில் விட்ட அரசியற் தவறுகளே. அந்தத் தவறுகளே அவர்களுடைய மரண நிகழ்வுகளிலும் பிரதிபலித்தன. இது இப்போதைக்கு முடிவடையாமல் மேலும் தொடரக் கூடிய சாத்தியங்களே அதிகமாக உண்டு.

60 ஆண்டுகளுக்கு மேலான அரசியல் வரலாற்றைக் கொண்ட மாவை சேனாதிராஜா (சோமசுந்தரம் சேனாதிராஜா) 1942 அக்டோபர் 27 இல் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மாவிட்டபுரத்திற் பிறந்தவர். மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர் என்பதால் 'மாவை' என்ற அடைமொழியுடன் அழைக்கப்பட்டார். மாவிட்டபுரத்திலுள்ள வீமன்காமம் பாடசாலையிலும், காங்கேசன்துறை - நடேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி கற்ற பின்னர், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக இணைந்து இளங்கலைப் பட்டம் பெற்றார்.

சேனாதிராஜா இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டு, 1961 இல் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்குபற்றினார். 1962 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் இணைந்தார். 1966 முதல் 1969 வரை ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகப் பணியாற்றினார்.

1969 முதல் 1983 வரையான காலப்பகுதியில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு எட்டு வெவ்வேறு சிறைச்சாலைகளில் ஏழு ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்த சேனாதிராஜா, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது அவருக்கு மிகப் பெரிய வரவேற்பளிக்கப்பட்டது. இது மாவை சேனாதிராஜாவை அன்றைய இளைஞர்களிடத்திலே சிறைசென்ற போராளி, சிறை மீண்ட செம்மல் என்ற அளவுக்குப் பிரபலமாக்கியது. அப்போது ஒரு முன்னணிப் போராட்டக்காரராக சேனாதிராஜா கருதப்பட்டார்.

1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டார் சேனாதிராஜா. தமிழ் இளைஞர் பேரவைக்கு எதிராக தமிழ் மாணவர் பேரவை தீவிரப் போக்குடைய இளைஞர்களால் உருவாக்கப்பட்டது. தமிழ் இளைஞர் பேரவையோ தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நெருக்கமாக இருந்தது, பின்னாளில் கூட்டணியோடு கரைந்தது. தமிழ் மாணவர் பேரவை இந்தப் போக்கிலிருந்து விலகி, ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் குதித்தது. இது இளைஞர்களிடையே சேனாதிராஜாவுக்கு இருந்த ஆதரவைக் குறைத்தது. பின்னாளில் சேனாதிராஜா பாரம்பரிய அரசியல்வாதியாகச் சரிவடைவதற்கான தொடக்கமாகியது.

1980 களின் தொடக்கத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் அரசியலிலிருந்து தூர வைக்கப்பட்டபோது அதனோடு இணைந்திருந்த சேனாதிராஜாவும் தூரத்திலேயே இருந்தார். குறிப்பாக 1980 - 1989 வரை சென்னையில் நீண்டகாலம் அஞ்ஞான வாசம் புரிந்தார்.

1989 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.என்.டி.எல்.எஃப், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ரெலோ, த.வி.கூ கூட்டணி சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டார். ஆனாலும் அவரால் வெற்றியீட்ட முடியவில்லை. ஆனாலும், கூட்டணித் தலைவர்

தொடர்ச்சி▼

# மாவை சேனாதிராஜாவின் வரலாற்றுப் பயணம்

**தொடர்ச்சி▲**

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1989 .07.13 இல் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அமிர்தலிங்கத்தின் இடத்திற்கு சேனாதிராஜா தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1999.07. 29 இல் நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மீண்டும், தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்றார் சேனாதிராஜா. இது விடுதலைப் புலிகளுக்கு எதிரான அணியில் மாவை சேனாதிராஜா உள்ளார் என்பதற்கான அடை யாளமாகியது.

2000-ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி (தவிகூ) வேட்பாளராக யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

2001 அக்டோபர் 20 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தவிகூ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ததேகூ) என்ற கூட்டமைப்பை நிறுவின. அப்போது நிலவிய அரசியற் சூழலில் இதற்கு விடுதலைப் புலிகளின் அங்கீகாரமும் கிடைத்தது. இதற்கு முன் விடுதலைப. புலிகளுக்கு எதிர்முனையிலிருந்த சேனாதிராஜா தரப்பினர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தோடு புலிகளுக்கு நெருக்கமாகினர்.

2001 இல் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றம் சென்றார் சேனாதிராஜா. தொடர்ந்து 2004, 2010, 2015 ஆண்டுக ளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2020 இல் நடந்த தேர்தலில் தோல்வியடைந்தார். அதற் குப் பிறகு அவர் எந்தத் தேர்தலிலும் வெற்றியடையக் கூடிய சூழல் இல்லாது போய் விட்டது. அதற்கு முன், 2013 இல் வடக்கு மாகாணசபையின் முதல மைச்சர் வேட்பாளராகும் முயற்சியிலும் மாவைக் குத் தோல்வியே கிட்டியது. அந்த வாய்ப்பைச் சம்பந்தன், கொழும்பு மையத்தில் செயற்பட்டு வந்த சி.வி. விக்கினேஸ்வரனுக்கு வழங்கினார். இதனையிட்ட கவலை சேனாதிராஜாவுக்கு இருந் தது. ஆனாலும் அவரால் சம்பந்தனை மீறி எத னையும் செய்ய முடியவில்லை.

இதற்குப் பிரதியுபகாரம் செய்வதைப்போல 2014 செப்டம்பரில் சேனாதிராஜா இலங்கைத் தமி ழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய் யப்பட்டார். தொடர்ந்து 10 ஆண்டுகளாக சேனாதி ராஜாவே கட்சியின் தலைவராக நீடித்தார். அவருடைய தலைமைத்துவத்தில் குழப்பங்கள் உருவாகத் தொடங்கின. இதற்கு இரண்டு காரணங் கள் முக்கியமானவையாக இருந்தன. ஒன்று, சேனாதிராஜா எப்போதும் உணர்ச்சிகரமான தீவிர அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் இயல் பையும் அந்த வழிமுறையையும் கொண்டவராக இருந்தார். ஆனால் இதற்கு எதிர்த்திசையில் - மென்னிலையில் - கட்சியின் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் இருந்தன. காரணம்,

கட்சியின் தலைவராக மாவை இருந்தாலும் நடைமுறையில் அதனுடைய கட்டுப்பாட்டைச் சம்பந்தனே கொண்டிருந்தார். சம்பந்தனின் மறைவுக்குப் பிறகு அந்தச் செல்வாக்கைச் சுமந் திரன் கைப்பற்றியிருந்தார். இதனால் சேனாதி ராஜாவினால் அதை மீறி, தன்னடையாளத்தோடு எதையும் செய்ய முடியவில்லை. சேனாதிராஜாவின் அரசியல் வழிமுறையை ஆதரிப்போர் (சிறிநேசன், சிவமோகன், சிறிதரன், குகதாசன் போன்றோர்) அவருடன் அணி திரண்டாலும் மாவையின் தரப்பு அதில் வெற்றியைப் பெற முடியாமற் போய் விட்டது. இது சேனாதிராஜாவின் ஆளுமைக் குறைபாடாக அரசியல் நோக்கர்களால் விமர்சிக் கப்பட்டது.

இரண்டாவது காரணம், சேனாதிராஜா தன்னுடைய அரசியல் வாரிசாகத் தன்னுடைய மகன் கலையமுதனை முன்னிறுத்த முற்பட்டமையாகும். இதனோடு இணைந்ததாக கலையமுதனின் மனைவியினுடைய தாயாரும் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் மனைவி யுமான சசிகலாவை முன்னிலைப்படுத்த விளைந் தமையையும் சேர்த்துக் கொள்ளலாம். இதெல்லாம் சேனாதிராஜாவுக்கு எதிரான அலையை மேலும் உருவாக்கியது. பின்னாளில் தலைமைப் பொறுப்பில் சேனாதிராஜா நீடிக்க முடியாது என்ற கட்டத்தை உண்டாக்கியது. இதற்கு மாற்றாகப் புதிய தலை வரைத் தெரிவு செய்வதற்குக் கட்சி முற்பட்டது. அதற்காக மேற்கொள்ளப்பட்ட தெரிவு (சிறிதரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது) தவறு என வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதோடு நிலைமை மேலும் சிக்கலடைந்தது. இதையெல்லாம் கையாள முடியாத நெருக்கடிக்குள் - ஆளுமைச் சிக்கலுக்குள் மாவை மாட்டிக் கொண்டு திண்டாடினார். தொடர்ந்து 2024 இல் ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் தீர்மானம் ஒன்றாகவும் சேனாதிராஜாவின் நடவடிக்கைகள் ஒன்றாகவும் மாறிக் குழப்பம் மேலும் வலுத்தது. கட்சியின் கீழ் மட்டத் தொண்டர்கள் கூடத் தலைவரைப் பகிரங்க வெளியில் விமர்சிக்கும் நிலை ஏற்பட்டது. . கட்சிக்குள் நிலவிய - நீடித்த முரண்பாடுகளும் குழப்பங்களும் சேனாதிராஜாவின் தலைமைத் துவத்தைக் கேள்விக்குள்ளாக்கின. விளைவாக 2024 அக்டோபர் 7 அன்று தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து சேனாதிராஜா விலக வேண்டியேற்பட்டது.

அதற்குப் பின்னர் சேனாதிராஜாவின் முக்கியத் துவம் தமிழரசுக் கட்சியிலும் தமிழரின் அரசிய லிலும் இல்லை என்ற நிலைக்குள்ளாகியபோது, உள நெருக்கடிக்குள்ளானார் சேனாதிராஜா என்று அவருக்கு நெருங்கியவர்கள் கூறுகின்றனர். அதுவே அவருடைய மரணத்துக்குக் காரணம் என்றும் அவர்கள் சொல்கின்றனர். எப்படியோ, ஒரு மூத்த அரசியல் தலைவராக, தமிழர்களுடைய உரிமைக்கான இனவிடுதலை என்ற அடையாளத்தை முன்னிறுத்திய அரசியற் போராட்டத்தின் தொடக்க கால வரலாற்றைக் கொண்ட முன்னோடியாக இருந்தவர் சேனாதிராஜா. இதற்காக அவர் ஏழு ஆண்டுகள் சிறையில் இருந்திருக்கிறார். ஏறக் குறைய 10 ஆண்டுகள் அரசியல் தஞ்சமடைந்து இந்தியாவிலிருந்திருக்கிறார். பல்வேறு நெருக் கடிகளைச் சந்தித்திருக்கிறார். அதேவேளை அவ ரொத்த ஏனையோரை விட (காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், கோவை மகேசன், இறை குமாரன், உமைகுமாரன், வாசுதேவா, பரமதேவா, முத்துக்குமாரசாமி போன்றவர்கள்) சேனாதிராஜா பின்னாளில் பெருவாய்ப்பைக் கொண்டவராகினார். ஐந்து தடவை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டி ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கும் மேலாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தி ருக்கிறார். நீடித்த ஆயுளோடும் நீடித்த தலைமைப் பதவியோடும் தன் வாழ்நாளைக் கழித்திருக்கிறார். ஒரு மூத்த தலைவருக்குரிய முன்மாதிரிகளை சேனாதிராஜா உருவாக்காது விட்டாலும் அவருக்கு மக்களும் சக அரசியற் தரப்பினரும் மதிப்பு மிக்க அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர். குறிப்பாக அவருடைய கட்சி அவருக்கு வழங்கிய மதிப்பை - மரியாதையை விடவும் மதிப்பான இடத்தைச் சமூகம் வழங்கியுள்ளது. இதுவும் அரசியல் வர லாற்றுக்கு ஒரு படிப்பினையே ஆகும்.



# முல்லையில் அரச இயந்திரங்களால் அத்துமீறித் தொடரும் காணி அபகரிப்பு!

**மக்கள் தெருவிலா இருப்பது என்று கேள்வி எழுப்பிய ரவிகரன் எம்.பி.**

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர், வனஇலாகா, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச கட்டமைப்புக்கள் மக்களுக்கு உரிய காணிகளை தொடர்ந்தும் அத்துமீறி அபகரிப்புச் செய்வதால், மக்கள் குடியிருப்பதற்கே காணிகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு அரச இயந்திரங்கள் தொடர்ந்தும் மக்களின் காணிகளை ஆக்கிரமிப்புச் செய்தால் மக்கள் வீதிகளிலா குடியிருப்பது எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (03) இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவில் 255 குடும்பங்களுக்குக் குடியிருப்பதற்குக் காணியில்லை என்று முறையிடப்பட்டது. இந்த நிலையில் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஐயங்கன்குளத்தில் 21குடும்பங்களுக்கு, பழைய முறிகண்டியில் 04 குடும்பங்களுக்கும், புதுத்துவெட்டுவான் பகுதியில் 12 குடும்பங்களுக்கும், கல்விளான் பகுதியில் 15 குடும்பங்களுக்கும், தென்னியன் குளம் பகுதியில் 05 குடும்பங்களுக்கும், கோட்டைகட்டிய குளம் பகுதியில் 05 குடும்பங்களுக்கும், அம்பலப்பெருமாள் குளம் பகுதியில் 05 குடும்பங்களுக்கும், அமதிபுரம் பகுதியில் 07குடும்பங்களுக்கும், துணுக்காய் பகுதியில் 08 குடும்பங்களுக்குமாக மொத்தம் 255 குடும்பங்கள் துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவில் காணியற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் படையினராலும், வனஇலாகா, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச இயந்திரங்களால் மக்களினுடைய காணிகள் அதிகளவில் அபகரிக்கப்பட்டிருப்பதற்கான புள்ளி விவரங்கள் எம்மிடமுள்ளன.

இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள இந்த காணிகள் மீட்கப்பட்டு இவ்வாறு வலிந்து காணிகள் இல்லாமல் செய்யப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக வன இலாகா மக்களிடமோ, கிராமஅலுவலர், பிரதேச செயலாளர், மாவட்ட செயலர் எவருடனும் தொடர்பு கொள்ளாமல், அறிவித்தல் வழங்கப்படாமலேயே இவ்வாறு மக்களின் காணிகளில் எல்லைக் கற்கள் இடுகின்ற செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். இனி இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

எமது வன்னிப் பகுதிகளில் நீண்ட காலமா இடம்பெற்ற யுத்தம் காரணமாக தமது பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், நீண்ட காலத்துக்குப் பின்னரே தமது இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் அந்த மக்கள் இடப்பெயர்வுக்கு முன்னர் வாழ்ந்த குடியிருப்புக் காணிகள், நெற்செய்கைக் காணிகள், மேட்டுப் பயிர்ச்செய்கைக் காணிகள் உள்ளிட்ட அனைத்துக் காணிகளும் பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு பற்றைக்காடுகளாகக் காணப்படும் மக்களின் காணிகளையே வன இலாகா, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் எந்த அறிவிப்புக்களையும் செய்யாது தமது எல்லைக் கற்களை இட்டு ஆக்கிரமிப்புச் செய்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வாறு மக்களின் காணிகளை ஆக்கிரமிப்புச் செய்கின்ற திணைக்களங்களைச் சார்ந்தவர்கள் இவ்வாறான பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கு வருவதில்லை. இந்த அபகரிப்பாளர்கள் இந்த கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும். இவ்வாறானவர்களின் செயற்பாடுளை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறான அபகரிப்புச் செயற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எனவே இந்த இந்த விடயத்துக்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முறையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

ஏனெனில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009இற்கு முன்னர் வனவளத் திணைக்களத்திடம் 2,22006 ஏக்கர் இருந்த காணி 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடாவடித்தனமாக எமது மக்களின் காணிகளுக்கும் எல்லைக் கல்லிட்டு 4,35000 ஏக்கர் காணிகளாக வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது.

அந்தவகையில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களின் காணிகளை விடுதலைப் புலிகள் பாதுகாத்தனர். அவ்வாறு எமது மக்களின் காணிகளை விடுதலைப் புலிகள் பாதுகாத்ததால்தான் எமது மக்கள் நிறைவாகவும், சிறப்பாகவும் வாழ்ந்தார்கள்.

நிலம்தான் எமது உரிமை, நிலம் இல்லையேல் எதுவுமில்லை. அவ்வாறிருக்க எமது மக்களின் காணிகள் அனைத்தையும் அபகரிப்புச்செய்தால், எமது மக்கள் காணியின்றி தெருவிலா இருப்பது.- என்றார்.



# பாம்பன் பாலம் தைப்பூசத்தில் திறப்பு



இராமேஸ்வரத்தில் கட்டப்பட்டுள்ள புதிய பாம்பன் பாலத்தின் கட்டுமான பணிகள் நிறைவடைந்த நிலையில், அதன் திறப்பு விழா குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளது. இராமேஸ்வரத்தின் முக்கிய அடை யாளமாக விளங்கும் பாம்பன் பாலம் சேதமடைந்த நிலையில் அதன் அருகிலேயே புதிய பாம்பன் பாலம் கட்டப்பட்டுள்ளது.

545 கோடி ரூபா செலவில் செங்குத்து வடிவில் திறந்து மூடக்கூடிய அமைப்புடன், பழைய பாம்பன் பாலத்தின் சிறப்புகளோடு இப் புதிய பாலமும் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போது பாம்பன் பாலத்தின் கட்டு மான பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ள நிலையில் கடற்படையினரின் கப்பல் ஒன்றை பாம்பன் பாலத்தின் குறுக்கே பயணிக்க செய்து அதன் திறந்து மூடும் அமைப்பை சோதனை செய்ய உள்ளனர்.

புதிய பாம்பன் பாலம் எப்போது திறக்கப்படும் என மக்கள் ஆர்வமுடன் காத்திருக்கும் நிலையில், அடுத்த மாதத்தில் தைப்பூசம் நாளன்று அல்லது அதற்கு முன்தினம் பாலம் திறக்கப் படலாம் என்றும் புதிய பாலத்தை பிரதமர் மோடி நேரில் வந்து திறந்து வைக்க உள்ளதாகவும் இந்திய ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# டில்லி சட்டப் பேரவை தேர்தல் பிரசார நடவடிக்கை நிறைவு

டில்லி சட்டப் பேரவை தேர்தலின் தேர்தல் பிரசாரங்கள் நேற்று மாலையுடன் நிறைவடைந்தன.

டில்லி சட்டப் பேரவை பொதுத் தேர்தல் நாளை நடைபெறுகிறது.

நடைபெறும் இந்தத் தேர்தலில் ஆம் ஆத்மி,பாரதிய ஜனதாக் கட்சி,காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையில் மும்முனைப் போட்டி நிலவுவதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

மொத்தமாக 70 தொகுதிகளில் வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

வாக்கு எண்ணும் நடவடிக்கை 8 ஆம் திகதி நடைபெறும் எனவும் அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும் எனவும் அந்த நாட்டு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# பட்ஜெட்டில் தமிழகத்துக்கு அநீதி; தி.மு.க. கண்டன பொதுக் கூட்டம்

பட்ஜெட்டில் தமிழகத்துக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிராக 8 ஆம் திகதி கண்டன பொதுக்கூட்டம் நடைபெறும் என்று தி.மு.க. அறிவித்துள்ளது.

இதுகுறித்து திராவிட முன்னேற்ற கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழகத்தின் முக்கியத் திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழக முதல்வரின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பின்பும், எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது. மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என நிதிநிலை அறிக்கையிலும் தமிழகத்துக்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து வருகிற பெப்ரவரி 8, சனிக்கிழமை, மாலை தமிழகம் முழுவதும் அனைத்துக் கழக மாவட்டங்களின் சார்பில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



முன்னதாக மத்திய நிதிநிலை அறிக்கை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“மத்திய நிதிநிலை அறிக்கை என்றாலே தமிழ்நாட்டைப் பொருத்தவரை ஓரவஞ்சனைதானா, தமிழ்நாடு என்ற பெயர்கூட தொடர்ந்து இடம்பெறுவதில்லையே, எத்தனையோ கோரிக்கைகளை முன்வைத்தோமே, அதில் ஒன்றைக்கூடவா உறுதிசெய்து அறிக்கையில் சேர்க்க மனம் வரவில்லை, நெடுஞ்சாலைகள் – ரயில்வே திட்டங்கள், கோவை, மதுரை மெட்ரோ ரயில் எதையுமே கொடுக்காதது ஏன், எது தடுக்கிறது?

பொருளாதார ஆய்வறிக்கை, உயர் கல்வி நிறுவனங்களின் தரவரிசை அறிக்கை, நிதி ஆயோக் அறிக்கை என மத்திய அரசின் அனைத்து அறிக்கைகளிலும் முதன்மையான இடத்தைப் பிடிக்கிறது தமிழகம். பக்கத்துக்குப் பக்கம் தமிழகத்தின் செயல்பாடுகளுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்கப்படுகிறது. ஆனால், நிதிநிலை அறிக்கையில் மட்டும் இந்த ஆண்டும் தமிழகம் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஏன்?” என்று குறிப்பிட்டுள்ளார்.



# டொனால்ட் ட்ரம்பின் அறிவிப்பை அடுத்து ஆசிய பங்குச் சந்தையின் குறியீடுகள் வீழ்ச்சி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சீனா, மெக்சிக்கோ மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு வரி விதிக்கப்படும் என அறிவித்ததனை அடுத்து ஆசியப் பங்குச் சந்தைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

குறிப்பாக ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளின் பங்குச்சந்தையின் குறியீடுகள் சரிவை வெளிப்படுத்தியுள்ளன.

ஹொங்கொங் பங்குச்சந்தை நிறுவனங்கள் ஆரம்பத்தில் 2 வீதத்திற்கும் அதிக சரிவை எதிர்நோக்கிய போதிலும், பின்னர் ஓரளவு மேம்பட்டதாக வர்த்தக தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கனேடிய மற்றும் மெக்சிக்கன் பொருள்களுக்கு 25 சதவீத வரிகளையும், சீன பொருள்களுக்கு 10 சதவீத வரியையும் டொனால்ட் ட்ரம்ப் கடந்த சனிக் கிழமை அறிவித்தார்.

அவரின் இந்த திடீர் நடவடிக்கைக்குப் பதிலளிக்கும் விதமாகக் கனடாவும் மெக்சிகோவும் அமெரிக்கப் பொருள்களுக்கு, தங்கள் சொந்த வரிகளை அறிவித்துள்ளன.

சீனா உடனடியாக பதில் நடவடிக்கைகளை எடுக்காத போதிலும் கட்டாயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதியளித்துள்ளது.

எப்படியிருப்பினும் சீனா, மெக்சிக்கோ மற்றும் கனடா ஆகிய நாடுகள், அமெரிக்காவின் முதல் மூன்று வர்த்தக பங்காளிகளாகும்.

அதேவேளை, அமெரிக்கச் சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டு அதியுயர் பாதுகாப்பு அதிகாரிகளை ட்ரம்ப் நிர்வாகம் பதவி விலக்கியுள்ளது.

இந்த அமைப்பின் சுதந்திர தன்மையை ஒழித்து அதனை வெளியுறவுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில், ஏராளமானவர்கள் தங்கள் பதவியினை இழக்க நேரிடும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகளாவிய ரீதியாக பில்லியன் கணக்கான டொலர் செலவில் உயிர் காக்கும் உதவிகளுக்கு நிதி உதவி செய்துவரும் யூ.எஸ் எயிடுக்கும் பாதிப்பு ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

# அவுஸ்திரேலியாவில் 6 மாத மழைவீழ்ச்சி வெறுமனே 3 நாள்களில் பதிவானது

அவுஸ்திரேலியாவில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் பிரதான நெடுஞ்சாலைகளின் போக்குவரத்து பாதிப்படைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளப்பெருக்கு அதிகரித்ததன் காரணமாக ஆயிரக் கணக்கான மக்கள் அவர்களது வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

வீடுகளுக்கான மின்சார இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

தொடர் மழை காரணமாக அங்குள்ள ஆறுகள், நீர்த் தேக்கங்கள் என்பன பெருக்கெடுத்துள்ளன.



6 மாதங்கள் கிடைக்கும் மழைப்பொழிவு கடந்த மூன்று நாள்களில் பதிவாகியுள்ளதாக அந்த நாட்டு வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# சிரியாவில் கார் குண்டுவெடிப்பு; 14 பெண்கள் உட்பட 15 பேர் பலி

சிரியாவில் நடந்த கார் வெடிகுண்டு தாக்குதலில் 15 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயம்.

சிரியாவின் அலெப்போவின் வடகிழக்கிலுள்ள மன்பிஜ் நகரத்தில் நேற்று விவசாய தொழிலாளர்களை ஏற்றி வந்த வாகனத்தின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்ட கார் வெடிகுண்டு வெடித்ததில் 14 பெண்கள் மற்றும் ஓர் ஆண் உயிரிழந்துள்ளனர் என கூறப்படுகிறது. மேலும், 15 பெண்கள் இந்த தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனர். இருப்பினும், பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு இந்தத் தாக்குதலில் 18 பெண்கள் உயிரிழந்துள்ளனர் என கூறியுள்ளது.



இந்தச் சம்பவத்துக்கு எந்தக் குழுவும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை. காயமடைந்தவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர் எனவும் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. ஒரு மாதத்துக்குள் மன்பிஜில் நடந்த ஏழாவது கார் குண்டுவெடிப்பு இது என்று சிவில் பாதுகாப்பு துணை இயக்குநர் முனீர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.02.2025




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்று வீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செல வழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை மேம் படுத்திக் கொள்வீர்கள். வாய்ப்புகள் கிடைக்கும். அதை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முயல்வீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று வளமான நாளாக அமையும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள் ளுங்கள்.




இன்று நீங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுவீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் மன ஆறுதலை அளிக்கும்.

பணியில் கூடுதல்பொறுப்புகள் சுமக்க நேரும். வேலை சம்பந்தமான பயணம் காணப்படும். இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பணிகளைக் கையாள வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க அகந்தைப் போக்கை கவனமாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.கணுக்கால் மற்றும் தோள்களில் வலி காணப்படலாம். முறையான உடற்பயிற்சி மேற் கொள்வது சிறந்தது.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மதிப்பு மிக்க பொருளை இழக்க நேரலாம். கவனமாக இருக்கவும். இன்று திருப்தியான மன நிலை இருக்காது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கவனமுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் பதற்ற உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் வாக்குவாதம் எழும். இந்த நடத்தையை கைவிடுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். சிறப்பாக திட்டமிடுவதும் அதனை செயலாற்றுவதும் இன்று வெற் றியை பெற்றுத் தரும்.




இன்று அமைதி மற்றும் செழிப்பு காணப்படும் அனுகூலமான நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைக ளுக்கு பாராட்டு கிடைக்கும். சக பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

உங்கள் தொடர்பாடல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. புதிய முதலீட்டுக்கான திட்டம் இன்று நீங்கள் மேற்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் நேர்மறை ஆற்றல் கார ணமாக இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். சவால்கள் நிறைந்து காணப்பட்டாலும் அதனை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள். பயணங்கள் செல்ல வாய்ப்புள்ளது.

உங்கள் பணிகளை ஒரு கொள்கையுடன் மேற்கொள்வீர்கள். அது வெற்றிக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாக நடந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

பயணம் மூலம் இன்று பண வரவு ஏற்படலாம். ஆன்மீக விஷயத்துக்காகச் செலவு செய்ய நேரலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




அதிக சிந்தனைகள் காரணமாக மனதில் குழப்பம் ஏற்படலாம்.இன்று வெற்றிகள் காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில தடைகள் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு பேச்சு வைத்துக் கொள்ளுங்கள். உறவில் அமைதியின்மை ஏற்படாமல் இருக்க இது மிகவும் அவசியம்.

போதிய பணம் கையில் இருந்தாலும் அதனை நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய இயலாது. வீண் செலவு ஏற்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் மூலம் ஆறுதல் கிடைக்கும்.




இன்று மிதமான பலன்களே கிடைக் கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப் பதை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நேர் மறை எண்ணங்களுடனான அணுகு முறை கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு காரணமாக பணி யில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். உங்கள் பொறுப்புகளை அறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பாக மனம் திறந்து பேசுங்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

செலவுகள் அதிகரிக்கும். வீணான செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.02.2025




இன்று உங்கள் இலக்குகள் நிறைவேறும். என்றாலும் முறையாக திட்டமிட்டால் இன்னும் சிறபான பலன்களைக் காணலாம்.

பணியில் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக நேரம் கழிப்பீர்கள்.

இன்று வலுவான நிதி ஆதாரங்களை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனால் இன்று நீங்கள் துடிப்புடன் உற்சாகமாக இருப்பீர்கள்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதைரியம் தடையாக இருக்கும்.

பணியில் கவனம் செலுத்த முடியாதபடி பதற்றம் காணப்படும். அமைதியாக பணிகளை மேற்கொண்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையுடனான கருத்து வேறுபாடு காரணமாக உறவில் அமைதியின்மை காணப்படும். இதனை சமாளிக்க வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவது இன்று எளிதாக இருக்கும்.

உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள். இன்று உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதன் மூலம் குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகள் பூர்த்தி ஆகும். நீங்கள் சிறிய வகையிலான கடன்கள் வாங்குவீர்கள்.

ஆரோக்கியமான மனதின் காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எனவே உற்சாகமாக ஆற்றலுடன் இருங்கள்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு, செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவுக்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



# கொள்கலன்கள் சுங்கப் பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்டமை தொடர்பில் விசாரிக்க குழு

323 இறக்குமதி கொள்கலன்களை சுங்கப் பரிசோதனையின்றி விடுவித்துள்ளதாக வெளியான தகவல் தொடர்பான விசாரணைகளுக்காக நிதிய மைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

திறைசேரியின் பிரதி செயலாளர் ஏ.கே. செனவிரத்ன தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.பி. ஜயசுந்தர, வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே. பி. குமார, முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.பி. குரும்பலப்பிட்டிய, சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளர் சபுமல் ஜயசுந்தர ஆகியோர் இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர். இதனிடையே தற்போது தரித்துநிறுத் தப்பட்டுள்ள கொள்கலன்களை 4 நாள்களில் விடுவிக்க இலங்கை சுங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.